செ. வெ. எண் 816 நாள் 10-11-09

## செய்தி வெளியீடு – 10.11.2009

# இலங்கை அகதிகள் முகாம்களைப் பற்றி விவாதிப்பதற்கு 12.11.2009 அன்று தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு !

31.10.2009 அன்று நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அமைச்சர்களை அந்தந்த மாவட்டங்களில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களை, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் நேரடியாகச் சென்று, பார்வையிட்டு முகாம்களில் அரசு சார்பில் செய்யவேண்டிய அடிப்படை வசதிகளைப் பற்றிய அறிக்கைகளை, 10.11.2009க்குள் வழங்கிட வேண்டுமென்று அறிவுரைகள் வழங்கியிருந்தார்கள். அதனையொட்டி, இன்று (10.11.2009) மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம், மாண்புமிகு அமைச்சர்கள், இலங்கைஅகதிகள் முகாம்களைப் பற்றிய அறிக்கைகளை நேரடியாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அறிக்கைகளைப் பற்றி விரிவாகக் கலந்தாலோசனை செய்து, முடிவுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, 12.11.2009 அன்று தமிழக அமைச்சரவைக் கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கூட்டியிருக்கிறார்கள்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9